# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | |
|---|---|---|
| Case No | : | CC.No.43/2021 |
| Deposition of Witness for | : | P.W.3 |
| Name | : | அருள்பிரகாஷ் |
| Father/Husband Name | : | கணேசன் |
| Village | : | டி.பி.சாலை |
| Taluk | : | சங்ககிரி |
| Caste | : | ஆதிதிராவிடர் |
| Calling | : | அருள்பாரத்கேஸ் |
| Religion | : | இந்து |
| Age | : | 46 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 03.03.2022.

03.03.2022 – முதல் விசாரணை :

நான் தற்போது சங்ககிரி டி.பி ரோட்டில் குடியிருந்து, அருள்பாரத் கேஸ் ஏஜென்சி வைத்து நடத்திவருகிறேன். கடந்த 29.06.2020 -ம் தேதி எனது உறவினரான மனோராஜ் என்பவர் காலை 11.00 மணியளவில் சங்ககிரியிலுள்ள அவரது நண்பர் சஜித் வீட்டிற்கு இருசக்கரவாகனத்தில் சென்றுள்ளார். பின்னர் மதியம் 01.45 மணியளவில் அ.சா.1 மனோராஜ் அவரது நண்பரின் வீட்டிற்கு வெளியே வந்துபார்த்தபோது, அ.சா.1 வெளியே நிறுத்தியிருந்த இருசக்கராவகனம் காணாமல் போயிருந்தது. எனவே அ.சா.1 எனக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு மேற்படி விவரத்தை கூறினார். எனவே நான் உடனடியாக புறப்பட்டு சென்று அ.சா.1 உடன் இருசக்கராவகனத்தை அக்கம்பக்கத்தில் தேடிபார்த்தோம். ஆனால் இருசக்கராவகனம் கிடைக்கவில்லை. எனவே அ.சா.1 மனோராஜ் சங்ககிரி காவல்நிலையத்தில் புகார்கொடுத்தார். இதுகுறித்து சங்ககிரி போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்குவிசாரணை- எதிரிகள்தரப்பில்

இருசக்கரவாகனம் காணாமல்போனது குறித்து அ.சா.1 எனக்கு தொலைபேசியில் தகவல்சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். மதியம் 02.15 மணியளவில் சங்ககிரி காவல்நிலையம்சென்று அ.சா.1 புகார்கொடுத்தார். நானும், தம்பிதுரை மற்றும் மோனோராஜ் ஆகியோர் காவல்நிலையத்திற்கு சென்றோம். புகாரினை நான்தான் எழுதினேன். அ.சா.1 மோனோராஜ் டிப்ளமோ படித்துள்ளார். அ.சா.1 -க்கு எழுதபடிக்க

தெரியும் என்றால் சரிதான். எனக்கு காவல்நிலையத்தில் தொடர்பு உள்ளதால் நடக்காத சம்பவம் குறித்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இவ்வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>-இல்லை.

Sd/-Arulprakash

Sd/-T.Sundarrajan, 03.03.2022
Judicial Magistrate No.I, Sankari.

<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | |
|---|---|---|
| Case No | : | CC.No.43/2021 |
| Deposition of Witness for | : | P.W.4 |
| Name | : | தம்பிதுரை |
| Father/Husband Name | : | முத்துசாமி |
| Village | : | டி.பி.சாலை |
| Taluk | : | சங்ககிரி |
| Caste | : | அருந்ததியர் |
| Calling | : | டிரைவர் |
| Religion | : | இந்து |
| Age | : | 49 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 03.03.2022.

<u>03.03.2022 – முதல் விசாரணை :</u>

நான் தற்போது சங்ககிரி, டி.பி ரோட்டில் குடியிருந்து டிரைவராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 29.06.2020 -ம் தேதி மதியம் சுமார் 01.00 மணியளவில் சங்ககிரி புவனேஸ்வரி மருத்துவமனை அருகேயுள்ள டீக்கடையில் நான் டீ குடித்துகொண்டிருந்தேன். அப்போது அ.சா.1 மோனோராஜ் என்பவர் வாகனத்தை காணவில்லை என வந்துகூறினார். நான் அவரிடம் காவல்நிலையத்தில் புகார்கொடுக்குமாறு தெரிவித்தேன். இதுகுறித்து போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>குறுக்குவிசாரணை</u>-எதிரிகள்தரப்பில்

வழக்கு சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், கேள்விப்பட்டுதான் தெரிந்துகொண்டேன் என்றாலும் சரிதான். காவல்நிலையம் எதுவும் நான் செல்லவில்லை. சம்பவத்திற்கு இரண்டுநாள் கழித்து காவல்நிலையத்தில் வைத்து எழுதயபேப்பரில் நான் கையெழுத்து செய்துகொடுத்தேன். அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது.

<u>மறுவிசாரணை</u>-இல்லை.

Sd/-Thampiturai

Sd/-T.Sundarrajan, 03.03.2022
Judicial Magistrate No.I, Sankari.

<u>DEPOSITION OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | |
|---|---|---|
| Case No | : | CC.No.43/2021 |
| Deposition of Witness for | : | P.W.5 |
| Name | : | மணிகண்டன் |
| Father/Husband Name | : | பரமசிவம் |
| Village | : | ஊஞ்சக்காடு |
| Taluk | : | சங்ககிரி |
| Caste | : | வன்னியர் |
| Calling | : | கூலிவேலை |
| Religion | : | இந்து |
| Age | : | 27 |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 03.03.2022.

<u>03.03.2022 – முதல் விசாரணை :</u>

நான் தற்போது ஊஞ்சக்காட்டில் குடியிருந்து கூலிவேலை செய்துவருகிறேன். கடந்த 29.06.2020 -ம் தேதி மதியம் சுமார் 03.30 மணியளவில் நான் காளியன்னகவுண்டம்பாளையத்திலிருந்து வீட்டிற்கு எனது இருசக்கரவாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது, கணேசன் என்பவர் எனக்கு போன்செய்து அவருடைய இருசக்கரவாகனத்தை யாரோ திருடிசெல்வதாக கூறினார். எனவே நான் வீட்டிற்கு செல்லாமல் இருசக்கரவாகனத்தை தேடி சென்றேன். அவ்வாறு காளிகவுண்டம்பாளையம் அருகே சென்றபோது, கணேசனின் இருசக்கரவாகனம் மற்றும் புளூகலர் அப்பாச்சி வாகனம் ஆயிவற்றுடன் இரண்டு நபர்கள் நின்றிருந்தார்கள். நாங்கள் சென்று அவர்களை பிடித்து விசாரித்தபோது, இருவரும் மதுபோதையில் இருந்தனர். ஒருவர்பெயர் சிலுவை (எ) கௌதம் என்றும், மற்றொருவர் பெயர் கார்த்திகேயன் என்றும் கூறினார்கள். பின்னர் நாங்கள் பல்சர் மற்றும் அப்பாச்சி இருசக்கரவாகனங்களுடன் இருவரையும் சங்ககிரி காவல்நிலையம் அழைத்துவந்தோம். ஆஜர் எதிரிகள் இருவரும்தான் நாங்கள் சம்பவத்தன்று இருசக்கரவாகனங்களுடன் பிடித்த நபர்கள் ஆவார்கள். போலீசாரிடம் எதிரிகளை ஒப்படைத்தற்கு பின்னிட்டு போலீசார் எதிரி சிலுவை (எ) கௌதமை விசாரித்தனர். எதிரி கௌதம் கூறியதை போலீசார் ஒப்புதல் வாக்குமூலமாக எழுதிக்கொண்டு என்னிடம் சாட்சி கையெழுத்து பெற்றனர். பின்னர் எதிரி கார்த்திகேயனை விசாரித்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவுசெய்து, என்னிடம் சாட்சி கையெழுத்து பெற்றனர். என்னுடன் கோபி என்பவரும் ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி கையெழுத்து செய்தார். இதுகுறித்து போலீசர் என்னை விசாரித்தனர்.

<u>குறுக்குவிசாரணை</u>-எதிரிகள்தரப்பில்

சம்பவத்தன்று நான் வெளியே சென்றுவிட்டு வீட்டிற்கு சென்றுகொண்டிருந்தேன். கணேசன் என்பவரின் இருசக்கரவாகனத்தின் பதிவெண் எனக்கு தெரியாது. அதேபோல் அப்பாச்சி வாகனத்தின் பதிவெண்ணும் எனக்கு தெரியாது. இரண்டு வாகனங்களைதான் நாங்கள் பிடித்தோம் என்றால் சரிதான். காளிகவுண்டம்பாளையம் பஸ்டாப் அருகேவைத்து எதிரிகளை பிடித்தோம். காவல்நிலையத்திற்கு மாலை 06.00 மணிக்கு சென்றோம். கணேசன் புகார்கொடுத்தார். ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசார் எழுதினார்கள். 3 முதல் 4 பக்கங்கள் ஒப்புதல் வாக்குமூலம் இருந்தது. ஒப்புதல் வாக்குமூலங்களில் இரவு 11.45 மணி மற்றும் 12.15 மணி அளவில் கையெழுத்து செய்துகொடுத்தோம். முதலில் நான் கையெழுத்து செய்தேன். இரண்டாவதாக கோபி கையெழுத்து செய்தார். வாக்குமூலம் தவிர வேறு எதிலும் நான் கையெழுத்து செய்யவில்லை. சங்ககிரி போலீசார் இருசக்கரவாகனம் பிடித்தன்று இரவு 07.00 மணியளவில் என்னை விசாரித்தனர். நான் சம்பவஇடமே செல்லவில்லை என்றாலும், வாகனம் எதுவும் பிடிக்கவில்லை என்றாலும் சரியல்ல. நான் சொன்னநேரத்தில் சொன்ன இடத்தில் வைத்து கையெழுத்து செய்யவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>-இல்லை.

Sd/-Manikandan

Sd/-T.Sundarrajan, 03.03.2022
Judicial Magistrate No.I, Sankari.